IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.SC.No. 39/2024 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 4, PW 3 |
| Name | பிரகாஷ். |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21st day of May 2025.

21.05.2025.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

சத்தியமாக சொல்கிறேன்.

முதல் விசாரணை:–

நான் தற்சமயம் எல்கில்லில் குடியிருந்தும், கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஜீலியட் மேரி என்பவர் எனது மனைவி அவர் மார்கெட் அருகில் உள்ள ரேஷன் கடையில் பணியாளராக வேலை செய்து வருகிறார். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி எனது மகள் உறவு முறை

ஆகிறார். கடந்த 13.01.2024 ஆம் தேதி எனது மனைவியை பார்ப்பதற்காக மாலை நேரத்தில் கடைக்கு வந்தார். பின்னர், வேலை முடித்து என் மனைவி வந்த போது என் வீட்டிற்கு வந்துள்ளார். வீட்டிற்கு வெளியில் இருந்து போன் பேசி கொண்டிருந்ததவர். சுமார் அரை மணி நேரம் கழித்து பார்த்த போது காணவில்லை. அக்கம் பக்கம் தேடி பார்த்தும், அவருடைய அக்காவிற்கு போன் செய்துள்ளார். எனது மனைவி எனக்கும் போன் செய்து சொன்னார். நானும் தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. பின்னர், மறுநாள் காலை என் மனைவியுடன் சென்று பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் புகார் கொடுத்தார். பின்னர், போலிசார் எங்கள் வீட்டருகில் வந்திருந்தார்கள். அங்கு விசாரித்துவிட்டு வரைபடமும் , பார்வை மகஜர் தயாரித்துள்ளார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், என் மனைவி ஜூலியட் மேரியும் சாட்சி கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது. அந்த பார்வை மகஜர் (அதசாஆ 3) ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>

பாதிக்கப்பட்ட சிறுமி எப்போது காணாமல் சென்றார் என்று விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் அன்று மாலை 8.00 மணிக்கு தெரிய வந்தது. போலிசார் எனது வீட்டின் அருகே எப்போது வந்தார்கள் என்றால் 14 ஆம் தேதி வந்தார்கள். பகலில் வருகை புரிந்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை எனது வீட்டில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணங்களில் என்ன விவரங்கள் உள்ளது என்று கேட்டால் தற்சமயம் அது எனக்கு ஞாபகம் இல்லை. பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர் என்பதால் நான் போலிசார் கேட்டு கொண்டதற்கு இனங்க காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு

**தற்சமயம் வீட்டில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சொல்கிறேன் என்றால் அது சரியல்ல.**

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

**இல்லை.**

Sd/- Prakash/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.